**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 23.11.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28° செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 22°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 9° செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 68 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 42 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

#### வேளாண் அறிவுரை

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு குறைந்த வெப்பநிலை மற்றும் போதுமான காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இறவை மஞ்சளில் இலைப்புள்ளி அதிகளவில் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்கானித்து, ஏக்கருக்கு 1 கி மேன்கோசெம் (அ) 500 கிராம் கார்பன்டசிம் (அ) 1.25 கி காப்பர் ஆக்ஸிக்ளோரைடு மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு குறைந்த வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால், ரோஸ் செடியில் மேல் சாம்பல் நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து, நனைந்த கந்தக மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் என்ற அளிவல் கலந்து தெளிக்கவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ என்ற வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், நடுப்பட்ட கரும்புக்கு விட்டம் கட்டுவதுடன் அடுத்த பாரிலுள்ள விட்டத்துடன் சேர்த்து கட்டவும்.
- ✓ கதிர் பிடிக்கும் பருவத்தில் உள்ள மத்திய கால சம்பா நெற்பயிர்களில் பூக்கள் எண்ணிக்கை மற்றும் நெல் மணிகள் அதிகரிக்க 1 % யூரியா மற்றும் 2 % டி.ஏ.பி மற்றும் 1 % பொட்டாஷியம் குளோரைடு தெளிக்கவும்.
- ✓ குறைந்த வெப்பநிலை பாதிப்பிலிருந்து தவிர்க்க கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு அதிக கலோரி உள்ள தீவனங்களை கொடுக்கவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் இ காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 2 முதல் 17 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### வேளாண் அறிவுரை

- ➢ சம்பா நெற்பயிரில் மேலுரமாக ஏக்கருக்கு 25 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து சீராக தூவவும்.
- ➢ தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- சம்பா நெற்பயிரில் இலைமடக்குப் புழு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரபனோபாஸ் 50 இ.சி. ஏக்கருக்கு 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.
- சம்பா நெற்பயிரில் 20 முதல் 30 நாட்கள் ஆன பயிர்களுக்கு ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸை 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவும்.

### தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டம், இலேசான முதல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 29°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 55 முதல் 90 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 15 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ மானாவாரி பயிர்களில் மண்ணிலிருந்து நீர் ஆவியாதலை தடுக்கவும் மற்றும் மண்ணில் ஈரப்பதத்தை தக்க வைக்கவும் வயலை களைக்கொத்தி கொண்டு களை நிர்வாகம் செய்து புழுதி மூட்டம் செய்யவும்.
- ✓ மானவாரியில் மண்ணின் ஈரப்பதத்தை காக்க பயிர்களின் இடைவெளிகளில் பயிர் கழிவுகள்அல்லது மரத்தின் இலைகளைக்கொண்டு மூடகம் அமைக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில் மானாவாரி பயிர்களில் மண் ஈரம் இருக்கும்பட்சத்தில் பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்க 2 சதம் டி.ஏ.பி. அல்லது 1 சதம் யூரியா கரைசலை மாலை வேளையில் மழை இல்லா நாட்களில் தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவிவரும் வானிலையில் இறவை மற்றும் மானாவாரி பயிர்களில் துத்தநாக குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய தகுந்த ஈரப்பதம் இருக்கும்போது 0.5 சத துத்தநாக சல்பேட் கரைசலை இலைவழி மூலமாக தெளிக்கவும்
- ✓ தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் சோளம் மற்றும் மக்காச்சோளத்தில் தண்டுத்துளைப்பானின் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த கார்பரில் நனையும் தூள் 500 லிட்டர் தண்ணீருக்கு 1 கிலோ வீதம் கலந்து தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் அதிகமான மேகமூட்டம் மற்றும் அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் பருத்தியில் தத்துப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 200 SL 100 மி.லி/ எக்டர் அல்லது பிப்ரோனில் 5% SC @ 1500-2000 மிலி /எக்டர் தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில் பயறுவகைப்பயிர்களில் புகையிலை வெட்டுப்புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 SL 100- 125 மிலி /எக்டர் அல்லது அல்லது குளோர்பைரிபாஸ் 20 WC @ 1 லிட்டர்/ எக்டர் அல்லது 3 % வேப்பஎண்ணெய் மிலி /எக்டர் தெளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் மிளகாயில் இலைப்பேனின் தாக்குதல் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகள் சுருக்கங்களுடன்; மேல் நோக்கி சுருண்டு காணப்படும். இலைக்காம்பு நீண்டு இருக்கும.; இப்பூச்சியை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 3 மி.லி/ 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமீத்தோயேட் 30% EC @ 1 மி.லி. / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவி வரும் இலேசானது முதல் மிதமான மழை பெற்றிருப்பதால் அம்மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வயலில் கம்பு, கொள்ளு, கொண்டைக்கடலை, கொத்தமல்லி, சென்னா மற்றும் பனிவரகு போன்ற பயிர்களை விதைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறர்கள்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 23°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 30°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 16°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 24°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 முதல் 17 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை வருவதற்கான வாய்ப்பு இல்லாததால் நிலவும் உள்ளூர் வானிலைக்கேற்ப விவசாயிகள் தங்களது தோட்ட பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் வேலைகளை திட்டமிடலாம்.
- ✓ பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு 25 கிலோ என்ற அளவில் மெக்னீசியம் சல்பேட் நுண்ணூட்ட உரத்தினை அளிக்கலாம்.
- ✓ நிலவும் சூழ்நிலையின் காரணமாக சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கக் கூடும். இதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த மஞ்சள் நிறபொறியினை ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.
- ✓ தற்போதைய தட்பவெப்ப சூழ்நிலையில் நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க தொழுவத்தை சுத்தமாக வைத்திருக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரில் 1%பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலினை பயன்படுத்தி பால் கறப்பதற்கு முன்னும் பால் கறந்த பின்பும் பசுமாட்டின் மடியை கழுவி விடவும்.
- ✓ நிலவும் வானிலையால் நெற்பயிர்களில் காணப்படும் நோய்களை கட்டுபடுத்த ஒரு லிட்டர்தண்ணீரில் 5 கிராம் ''சூடோமோனஸ்'' அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் ''டைதேன்எம்45'' என்ற மருந்தினை கலந்து தெளிக்கலாம். இதில் 1 லிட்டர் தண்ணீருக்கு 1மிலி ஒட்டுபசையினை கலந்து கொள்ளவும்.
- ✓ நிலவும் வானிலையின் காரணமாக, கரும்பு பயிரில் இடைக்கணுத் துளைப்பானின் தாக்குதல் காணப்படும், இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 3 சிசி என்ற அளவில் டிரைககோகிரம்மா ஒட்டுண்ணி அட்டைகளை பயன்படுத்தலாம்.
- ✓ நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி./ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம்/ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.
- ✓ நெல் பயிரில் தண்டுத்துளைப்பான் பூச்சி தென்படுகிறது, அதனைக் கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 EC1000 மிலி/ஹெக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 SL 600 மிலி/ஹெக்டர் அல்லது புரபனோபாஸ் 50 EC 1000 மிலி/ஹெக்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- ✓ கறவை மாடுகளுக்கு மடிவீக்க நோய் தாக்க வாய்ப்புள்ளது. எனவே, 1லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி என்ற அளவில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கொண்டு பால் கறப்பதற்கு முன்னும்,பின்னும் மடியை கழுவவும்.
- ✓ பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு 25 கிலோ என்ற அளவில் மெக்னீசியம் சல்பேட் நுண்ணூட்ட உரத்தினை அளிக்கலாம்.
- ✓ நிலவிவரும் தட்பவெப்ப சூழ்நிலையால் சாறு உறிஞ்சும பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கக் கூடும். இதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த மஞ்சள் நிறபொறியினை ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.
- ✓ நிகழும் தட்பவெப்ப சூழ்நிலையில், பருத்தி பயிரில் வெள்ளை ஈ மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் காணப்படலாம். இதனை தடுக்க இமிடாக்லோப்ரிட் என்ற மருந்தினை ஹெக்டேருக்கு 100 மில்லி என்ற அளவில் தெளிக்கலாம். இதனை உயிரியல் முறையில்கட்டுப்படுத்த மஞ்சள் நிறபொறியினை ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 9 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை வராது என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ இஞ்சி பயிரில் நடவின் போதும், நடவுக்கு பின் 60 ஆம் நாள் மற்றும் 120 ஆம் நாளில் பசுந்தழைகளை கொண்டு மூடாக்கு இடுவதன் மூலம் இஞ்சி உற்பத்தியை கூட்ட முடியும்.
- ✓ காய்கறி பயிர்களில் வேர் புழுவின் பாதிப்பு அதிகரித்துள்ளது. கட்டுப்படுத்த, பெவேரியா மற்றும் மெட்டாரைசியம் நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகளை ஏக்கருக்கு 8 கிலோ என்ற அளவில் தொழு உரத்துடன் கலந்து இடவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டம் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 68 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வடகிழக்கு பருவமழையின் தாக்கம் அறவே இல்லாத காரணத்தால், மழைக்கான வாய்ப்புகள் இன்றி காணப்படும். ஆயினும் பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் இயல்பாகவே நிலவும் என்பதால் கோழிகளில் இயல்பான தீவன எடுப்பு, உற்பத்தி மற்றும் முட்டை ஓட்டின் தரம் காணப்படும்.
- ✓ நீரின் உபயோகம் மற்றும் தீவன மூலப்பொருட்களின் தரம் ஆகியவற்றின் மீது கவனமும், எச்சரிக்கையும் கொண்டு செயல்பட வேண்டும். சோயாப் புண்ணாக்கில் உபயோகம் அதிகரித்துள்ளதால், அதன் தரம் பரிசோதனை செய்த பின்னரே உபயோகப்படுத்தப்பட வேண்டும்.
- ✓ தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை, உளுந்து . பாசிபயறு, துவரை மற்றும் பருத்தி போன்ற பயிர்கள் நீர் பற்றாக்குறையினால் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வறட்சியிலிருந்து பயிர்களை பாதுகாத்திட 1 லிட்டர் தண்ணீரில் 5-10 மி.லி பி.பி.எப்.எம். (PPFM) என்ற மீதைலோ பாக்டீரியா திரவக் கரைசலை கலந்து பயிர்களின் மேல் தெளிப்பு செய்யலாம்

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் 53 முதல் 83 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6-9 கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கால் நடைகளின் கொட்டகையை மேடான பகுதியில் அமைப்பதன் மூலம் மழை பெய்யும் நாட்களில் தண்ணீர் தேங்காமல் உலர்ந்த நிலையில் பார்த்துக் கொள்ளலாம்.
- ✓ உழவர்கள் தங்களின் கால்நடைகளுக்கான கொட்டகைக் சுற்றிலும் தண்ணீர் தேங்காத வண்ணம் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் புதிய புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப்புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
- ✓ செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ உழவர்கள் தங்களுடை கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்பபதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ நெல் நாற்றாங்காலில் இலைப்பேனை கட்டுப்படுத்த லிட்டருக்கு பாஸ்போமிடான் 40 SL - 1 மி.லி அல்லது குளோரிபைரிபஸ் 20 EC - 2 மி.லி தெளிக்கவும்.
- ✓ நெற் பயிரில் குலை நோயைக் கட்டுபடுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அல்லது ஒரு மி.லி. கார்பன்டாசிம் 50 WP அல்லது டிரைசைக்ஸோல் 75 WP அல்லது மெட்டாமினோஸ்ட்ரோபின் 20 SC அல்லது அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ நெல் வயலில் பச்சைப் பாசியைக் கட்டுப்படுத்த மயில் துத்தநாகத்தை (Copper Sulphate) 500 கிராம் என்ற அளவில் காடா துணியில் கட்டி நெல் வாமடையில் வைக்கவும்.
- ✓ ஒரு ஹெக்டர் நெற் பயிருக்கு அடி உரமாக 80 கிலோ யூரியா + 300 கிலோ சூப்பர் பாஸ்பேட் பொட்டாஷ் மற்றும் 25 கிலோ ஜின்க் சல்பேட் (தனியாக) உரத்தினை நடவுக்கு முன் இடவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 75 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 10கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் மர வாசனை பயிர்களை சுற்றி வட்டப் பாத்திகள் அமைத்து மழை நீரை சேமிக்கவும்.
- ✓ தரையில் படரும் மிளகு ஓடு கொடிகளை தாங்கு மரங்களில் ஏற்றி விடவும்.
- ✓ இலவங்கப்பட்டை செடியில் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த 0.25 சதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு தெளிக்கவும்.
- ✓ வாழையில் இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த கார்பென்டாசிம் 1 கிராம் / லிட்டர் என்ற அளவில் ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்கவும்.
- ✓ பாலித்தீன் ரைன் கார்ட்-ஐ ரப்பர் மரத்தில் பால் வடியும் பகுதியில் மேல் பொருத்தவும். இதனால் மழைக் காலங்களிலும் பால் வெட்டலாம்.


**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**